**வலல்லாவிட்ட பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலல்லாவிட்ட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வலல்லாவிட்ட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் பந்தி இலக்கம் 3.27 முதல் 3.32 இற்கு இடையிலான பந்திகளுக்கு இணங்க ரூபா 371,925 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமத்தின் பந்தி இலக்கம் 6.20 இன் பிரகாரம் ஒவ்வொரு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக நிறுவனம் பயன்படுத்திய பெறுமானத் தேய்வு முறை மற்றும் பெறுமதித்தேய்வு விகிதம் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையினால் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 20,015,117 ஆன வீதிகள் மற்றும் மதகுகள் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்யப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 1,653,802 ஆன மூலதன செலவின மானியங்களில் கைப்பெற்றப்பட்ட சொத்துக்களுக்காக வருடாந்த பெறுமானத் தேய்வு அளவிற்கு சமமான அளவொன்று முன்னைய ஆண்டினைப் போன்று மீளாய்வாண்டிலும் விரிவான வருமானக் கூற்றில் நடைமுறையல்லா செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களாக சீராக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நியமத்திற்கு இணங்க மூலதன மானியம் கணக்குவைக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சபை வேலைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினை விஞ்சி ரூபா 161,500 செலுத்துதல்களை கணக்கீடு செய்யும் போது சொத்துக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்து. | - மேற்படி - | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பெறுமானத் தேய்வு கொள்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 474,323 ஆன நூலகப் புத்தகங்க | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ளுக்காக பெறுமானத்தேய்வாக ரூபா 47,432 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | முன்னைய ஆண்டில் ரூபா 1,244,000 ஆன மீண்டெழும் செலவினம் கட்டிடக் கணக்கில் மூலதனமாக்கப்பட்டதன் தவறு மீளாய்வாண்டில் சரிசெய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வாக ரூபா 31,100 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | ஆண்டில் அகற்றப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 225,000 ஆன இயந்திரங்களுக்குரிய வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 11,250 கணக்கீடு செய்யப்பாதிருந்ததுடன் ஆண்டில் அகற்றப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 41,855 ஆன தளபாடங்களுக்குரிய திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 31,392 பெறுமானத் தேய்வு ஒதுக்கம் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 182 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 470,301 நிலுவை வருமானம் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | பிரதேச சபைகள் சட்டத்தின் தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2) | ரூபா 2,952,647 ஆன காலாவதியான வைப்புக்களை வருமானத்தை எடுப்பதற்கு முன் வைப்பாளர்களிடமிருந்து விசாரணை செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 13,572,596 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 55,306 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 1,973,760 | 1,974,003 | 1,576,976 | 1,082,402 | 2,557,230 | 2,783,222 | 2,194,574 | 1,649,246 |
| (ii) | வாடகை | 8,279,090 | 6,696,958 | 6,127,950 | 586,618 | 8,279,090 | 3,607,430 | 3,536,074 | 330,834 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 276,500 | 408,752 | 406,752 | 2,000 | 276,500 | 351,904 | 351,904 | - |
| (iv) | ஏனைய வருமான ம் | 581,000 | 941,070 | 923,130 | 17,940 | - | - | - | - |
| | மொத்தம் | 11,110,350 | 10,020,783 | 9,034,808 | 1,688,960 | 11,112,820 | 6,742,556 | 6,082,552 | 1,980,080 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 1,495,096 ஆக இருந்ததுடன் | நாட்டில் காணப்படுகின்ற சிக்கலான பொருளாதார நிலைமையினால் | நிலுவை வருமானத்தை விரைவாக |

| | | |
|---|---|---|
| ஆண்டின் போது அதில் ரூபா 633,384 அதாவது 42 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | செலுத்துதல் தவறவிடப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) **வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வியாபர நிலைய வாடகை நிலுவை ரூபா 71,356 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 50,104 அதாவது 70 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதுவரை அறவிடப்படவில்லை. | - மேற்படி - |

**(இ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,000,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,875,205 ஆகும். | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைவருக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 751,884 ஆன கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் 2022 ஆம் ஆண்டின் அழிவடைந்தமை தொடர்பாக பொறுப்புவாய்ந்த நபரை தீர்மானிப்பதற்காக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனைகளைச் செய்யுமாறு 2023.05.22 ஆம் திகதி மற்றும் 2024.04.01 ஆம் திகதி உள்ளூராட்சித் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய கெப் வண்டி, ஜேசீபீ இயந்திரம் மற்றும் டெக்டெர் வண்டி என்பன 02 வருடத்தில் இருந்தும், மேலும் 02 டெக்டெர் வண்டிகள் 09 வருட காலத்தில் இருந்தும் பழுதுபார்க்கப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது. | பழுதுபார்ப்பதற்கு மதிப்பீடு கிடைத்திருந்த போதிலும் சபைக்கு சொந்தமாக நிதி ஏற்பாடு காணப்படவில்லை. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி சொத்துக்களை பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்த ரூபா 1,600,000 பெறுமதியான கம்பெக்டெர் அந்த ஆண்டில் இருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவம் முறைமைப்படுத்துதல் வேண்டும். |